செ.வெ.எண்: 01 /செப்டம்பர் நாள்: 01-09-2017

# <u>செய்திக்குறிப்பு</u>

**<u>11.09.2017 அன்று பரமக்குடியில் இமானுவேல் சேகரன் நினைவு தினம் அனுசரித்தல் தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் சமுதாய தலைவர்களுடன் நடத்தப்பட்ட சட்டம் ஒழுங்கு முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்</u>**

1. அஞ்சலி செலுத்த இராமநாதபுரம் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் சொந்த வாகனங்களில் மட்டுமே வர அனுமதிக்கப்படுகிறது. வாடகை வாகனங்கள் (T.Board) மற்றும் திறந்த வெளி வாகனங்களில் (Open type) வரக்கூடாது. இரு சக்கர வாகனங்கள், டிராக்டர், டாடா ஏஸ் (TATA ACE), சைக்கிள் போன்ற வாகனங்களில் வரக்கூடாது.
2. சொந்த வாகனங்கள் மூலம் (கார், வேன் மற்றும் பிற இலகு வாகனங்கள் மட்டும்) வருகை தருபவர்கள் வாகன எண், வாகனத்தில் பயணம் செய்வோர் விபரங்களை 08.09.2017 ஆம் தேதிக்கு முன்பாக இராமநாதபுரம் காவல் கண்காணிப்பாளர் அலுவலக மாவட்ட தனிப்பிரிவு அலுவலகத்தில் அளித்து வாகன அனுமதி சீட்டு (Vehicle Pass) பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை வாகனத்தில் முன்புற கண்ணாடியில் ஒட்ட வேண்டும். வாகன அனுமதிச் சீட்டு இல்லாத வாகனங்கள் பரமக்குடி செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.
3. இதர மாவட்டங்களிலிருந்து சொந்த வாகனங்களில் வரும் நபர்கள் அந்தந்த மாவட்டங்களில் முறையான அனுமதி பெற்று வர வேண்டும்.
4. சொந்த வாகனங்களில் செல்பவர்கள் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டுமே நினைவிடத்திற்கு செல்ல வேண்டும்.
5. வாகனத்தின் மேற்கூரையில் பயணம் செய்யக் கூடாது.
6. வாகனத்தில் ஆயுதங்கள் ஏதும் எடுத்துச் செல்லக் கூடாது. வரும் வழித்தடங்களில் வெடி போடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.
7. வாகனத்தில் ஒலி பெருக்கிகள் பொருத்திச் செல்லக் கூடாது.
8. வாகனங்களில் சாதி மத உணர்வுகளைத் தூண்டும் வாசகங்கள் அடங்கிய பேனர்களைக் கட்டி வரவோ, கோஷங்களை எழுப்பவோ கூடாது.
9. பரமக்குடி நகருக்குள் சந்தைப் பேட்டை சந்திப்பு முதல் காட்டுப்பரமக்குடி வரை தேசிய நெடுஞ்சாலையில் எந்த ஒரு வாகனத்தையும் நிறுத்தி வைக்க அனுமதி கிடையாது.
10. வாகனங்களில் வரும்பொழுது வரும் வழியில் போக்குவரத்திற்கு இடையூறு செய்யும் வகையில் வாகனங்களை நினைத்த இடங்களில் நிறுத்தக் கூடாது.
11. அஞ்சலி செலுத்துவதற்காக கிராமங்களிலிருந்து பேருந்துகளில் வருபவர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து காலை 11.00 மணிக்குள் புறப்பட வேண்டும்.
12. பேருந்துகளில் பிளக்ஸ் போர்டு, பேனர், கட்சி கொடிகள் மற்றும் ஒலிபெருக்கி ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது. மேலும் ஜோதி தொடர்பான உபகரணங்களை பேருந்துகளில் எடுத்து வரக்கூடாது.
13. பேருந்துகளில் படிக்கட்டு மற்றும் மேற்கூரையில் பயணம் செய்யக்கூடாது.
14. பேருந்துகளில் அனைவரும் முறையாக பயணச் சீட்டு பெற்று வர வேண்டும்.
15. கூடுதல் பேருந்துகள் 11.09.2017 ஆம் தேதி ஒரு நாள் மட்டுமே இயக்கப்படும்.

16. தலைவர்கள் வரும்பொழுது உடன் 3 சொந்த வாகனங்கள் மட்டும் அனுமதிக்கப்படும், மேலும் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குறித்த நேரத்தில் அஞ்சலி செலுத்தி விட்டு செல்ல வேண்டும்.
17. நடைபயணமாக அஞ்சலி செலுத்த வரக்கூடாது. பரமக்குடி நகருக்குள் மட்டும் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் நடைபயணமாக செல்லலாம்.
18. ஜோதி, முளைப்பாரி மற்றும் பால்குடம் ஆகியவற்றிற்கு அனுமதி இல்லை. நினைவிடத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவிற்குள் மட்டுமே எடுத்து வர அனுமதிக்கப்படும்.
19. சொந்த ஊரில் செப்டம்பர் 11-ஆம் தேதிக்கு முந்தைய தினமோ, பிந்தைய தினமோ எவ்வித நிகழ்ச்சிகள் கொண்டாடவும், ஒலிபெருக்கி அமைப்பதற்கும் அனுமதி கிடையாது. செப்டம்பர் 11-ஆம் தேதி மட்டும் அவரவர்களது சொந்த ஊரில் ஒலிபெருக்கி இன்றி புகைப்படம் வைத்து, மாலை அணிவித்து மரியாதை செலுத்தலாம் பரமக்குடி நினைவிடத்தில் செப்டம்பர் 11-ஆம் தேதி மட்டும் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படும்.
20. அலங்கார ஊர்தி அணிவகுப்பு மாட்டு வண்டியில் வருதல், சாதித் தலைவர்கள் வேடமணிந்து வருதல் ஆகியவற்றுக்கு அனுமதி இல்லை
21. நினைவிடத்தில் தேவேந்திர பண்பாட்டுக் கழகம் சார்பாக மட்டுமே கூட்டத்தை முறைப்படுத்த ஒரு ஒலிபெருக்கி மட்டும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படும். நினைவிடத்திற்குள் தலைவர்கள் ஒலிபெருக்கியில் பேசுவதற்கு அனுமதி கிடையாது.
22. தேவேந்திர பண்பாட்டுக் கழகம் சார்பாக குறைந்த பட்சம் 100 தன்னார்வத் தொண்டர்களை (Volunteers) ஏற்பாடு செய்து நினைவிடத்தில் கூடியிருக்கும் கூட்டத்தினரை அவ்வப்போது வெளியேற்றி கூட்டத்தினை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்படி செய்ய வேண்டும்.
23. பிளக்ஸ் போர்டு மற்றும் சுவரொட்டிகள் ஆகியவை பரமக்குடி நகருக்குள் மட்டும் 3 நாட்களுக்கு (9,10,11ஆம் தேதிகளில்) மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். மேலும் பிளக்ஸ் போர்டு வைப்பதற்கு முன்பாக காவல்துறையிடம் முறையான அனுமதி மற்றும் நகராட்சியில் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது ஆகியவற்றினை இணைத்து விண்ணப்பிக்கும்பட்சத்தில் அனுமதி வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் அனுமதி எண் பிளக்ஸ் போர்டு மற்றும் சுவரொட்டிகளில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
24. பரமக்குடி நினைவிடத்தில் 11.09.2017 ஆம் தேதி அன்று மாலை 04.00 மணிக்குள் அனைத்து நிகழ்ச்சிகளையும் முடித்துக் கொள்ள வேண்டும்.
25. அஞ்சலி செலுத்த வருபவர்களில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் (Registered Political Parties) தலைவர்களுக்கு மட்டும் நேரம் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 08.09.2017 ஆம் தேதிக்கு முன்பாக விண்ணப்பத்தினை அளிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்,
இராமநாதபுரம்.

## 11.09.2017 அன்று பரமக்குடியில் இமானுவேல் சேகரன் நினைவு தினம் அனுசரித்தல் தொடர்பாக

## இராமநாதபுரம் மாவட்ட வாகனங்கள் நினைவிடம் சென்றுவரும் வழித்தடங்கள் விபரம்

| | |
|---|---|
| 1. | **வெள்ளையாபுரம், கமுதியிலிருந்து** வரும் வாகனங்கள் அபிராமம், பார்த்திபனூர், கமுதக்குடி வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்லவேண்டும்.<br>**இவ்வாகனங்கள் கமுதி - பேரையூர் வழியாக செல்லக்கூடாது.** |
| 2. | **சாலைகிராமம், இளையான்குடி** பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் அதிகரைவிலக்கு, நெடுங்குளம், கிருஷ்ணாபுரம், முள்ளியனேந்தல், மஞ்சள்பட்டிணம், ஆற்றுப்பாலம், வழியாக பரமக்குடி வந்து பின் வந்த வழியாக திரும்பிச் செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் குமாரக்குறிச்சி வழியாக செல்லக்கூடாது.** |
| 3. | **நயினார்கோவில், வானியவல்லம், பல்லவராயனேந்தல், எஸ்.வி. மங்கலம், கிளியூர், கங்கைகொண்டான், மும்முடிச்சாத்தான், குளத்தூர், பாண்டியூர்** பகுதி வாகனங்கள் அரசடிவண்டல் பாலம், மஞ்சள்கொல்லை, பொட்டிதட்டி மடம், கிருஷ்ணாதியேட்டர் வழியாக பரமக்குடி வந்து பின் வந்த வழியில் திரும்பிச் செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் இளமனூர், எமனேஸ்வரம் வழியாக செல்லக்கூடாது.** |
| 4. | **ஆர்.எஸ்.மங்கலம்** பகுதி வாகனங்கள், சோழந்துார், மங்கலம், தேவிபட்டிணம் பேராவூர், ECR வழியாக புதிதாக போடப்பட்டுள்ள பை பாஸ் சாலை வழியாக அச்சுந்தன்வயல் சென்று சத்திரக்குடி, கிருஷ்ணாதியேட்டர் வழியாக பரமக்குடி வந்து பின் வந்த வழியாக திரும்பவேண்டும்.<br>**இவ்வாகனங்கள் திருவாடானை செல்லக்கூடாது இராமநாதபுரம் நகருக்குள் செல்லக்கூடாது.** |
| 5. | **திருவாடனை** வாகனங்கள் தினையத்தூர், தொண்டி, ECR ரோடு வழியாக தேவிபட்டிணம், பேராவூர், ECR வழியாக புதிதாக போடப்பட்டுள்ள பை பாஸ் சாலை வழியாக அச்சுந்தன்வயல் சென்று , சத்திரக்குடி வழியாக பரமக்குடி சென்று பின் வந்த வழியாக திரும்ப வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் காளையார்கோவில் மற்றும் ஆர்.எஸ்.மங்களம் வழியாக செல்லக்கூடாது.**<br>**இராமநாதபுரம் நகருக்குள் செல்லக் கூடாது.** |
| 6. | **எஸ்.பி.பட்டிணம், தொண்டி, திருப்பாலைக்குடி** வாகனங்கள் ECR ரோடு வழியாக தேவிபட்டிணம், பேராவூர், ECR வழியாக புதிதாக போடப்பட்டுள்ள பை பாஸ் சாலை வழியாக அச்சுந்தன்வயல் சென்று சத்திரக்குடி, கிருஷ்ணாதியேட்டர் வழியாக பரமக்குடி வந்து பின் வந்த வழியாக திரும்பவேண்டும்.<br>**இவ்வாகனங்கள் திருவாடானை வழியாக செல்லக்கூடாது. இராமநாதபுரம் நகருக்குள் செல்லக்கூடாது.** |
| 7. | **மங்களகுடி** பகுதி வாகனங்கள் ஊரணிக்கோட்டை, பஞ்சமாரி, தேவகோட்டை சந்திப்பு (NH-210) சருகணி, காளையார்கோவில், சிவகங்கை, மானாமதுரை, பார்த்திபனுார், பரமக்குடி வந்து வந்த வழியாக திரும்பி செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் அஞ்சுகோட்டை, திருவாடானை வழியாக செல்லக்கூடாது.** |
| 8. | **இராமநாதபுரம் பகுதி வாகனங்கள்** பேராவூர், ECR வழியாக புதிதாக போடப்பட்டுள்ள பை பாஸ் சாலை வழியாக அச்சுந்தன்வயல் சென்று பின் சத்திரக்குடி வழியாக பரமக்குடி வந்து பின் வந்த வழியாக திரும்ப வேண்டும். |
| 9. | **திருப்புல்லாணி, கீழக்கரை, ஏர்வாடி,** வாகனங்கள் கீழக்கரை, திருப்புல்லாணி, களரி, உத்திரகோசமங்கை, எட்டிவயல், சத்திரக்குடி, கிருஷ்ணாதியேட்டர் வழியாக பரமக்குடி சென்று பின் வந்த வழியாக திரும்பவேண்டும். இவ்வாகனங்கள் ஆர்.எஸ்.மடை, இராமநாதபுரம் வழியாக செல்லக்கூடாது. |
| 10. | **களரி, உத்திரகோசமங்கை** பகுதிகளிலிருந்து வரும் வாகனங்கள் உத்திரகோசமங்கை விலக்கு, சத்திரக்குடி, கிருஷ்ணா தியேட்டர் வழியாக பரமக்குடி வந்து பின் வந்த வழியாக திரும்ப வேண்டும். |
| 11. | **சிக்கல், இதம்பாடல், T.மாரியூர், கீழச்செல்வனூர்** பகுதி வாகனங்கள் ஆதங்கொத்தங்குடி, தேரிருவேலி, கருமல், காக்கூர் விலக்கு முதுகுளத்தூர், வெந்நீர்வாய்க்கால், வெங்கலகுறிச்சி, சூரங்குளம் விலக்கு, சூரங்குளம், மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும். (அல்லது)<br>சிக்கல், இதம்பாடல் பகுதி வாகனங்கள் உத்திரகோசமங்கை, உத்திரகோசமங்கை விலக்கு, சத்திரக்குடி, கிருஷ்ணா தியேட்டர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே திரும்ப வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் காக்கூர், பொசுக்குடிபட்டி வழியாக செல்லக்கூடாது.** |

| | |
|---|---|
| 12. | **சாயல்குடி** வாகனங்கள் - கீழச்செல்வனூர், சிக்கல் ஆதங்கொத்தங்குடி, தேரிருவேலி, காக்கூர் விலக்கு முதுகுளத்தூர், வெந்நீர்வாய்க்கால், வெங்கலகுறிச்சி, சூரங்குளம் விலக்கு, சூரங்குளம், மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர், வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் மலட்டாறு விலக்கு, கடலாடி-முதுகுளத்தூர் மற்றும் கடலாடி வழியாகச் செல்லக்கூடாது.** |
| 13. | **கடலாடி-கருங்குளம், மாரந்தை** பகுதி வாகனங்கள் கடலாடி யூனியன் அலுவலகம், கடையகுளம், மாரந்தை, சவேரியார்பட்டிணம், சவேரியார்சமுத்திரம், சடையனேரி, இராமலிங்கபுரம், காக்கூர் ஆர்ச், கிழக்கு தெரு, முதுகுளத்தூர், வெந்நீர் வாய்க்கால், வெங்கலங்குறிச்சி, சூரங்குளம் விலக்கு, சூரங்குளம், மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் கடலாடி - மலட்டாறு விலக்கு, கடலாடி - முதுகுளத்தூர் மற்றும் M.சாலை, காத்தாகுளம் வழியாக செல்லக்கூடாது.** |
| 14. | **வீரம்பல்** பகுதி வாகனங்கள் இளஞ்செம்பூர் PS, முனியன்கோவில் விலக்கு, முதுகுளத்தூர் வெந்நீர்வாய்க்கால், வெங்கலக்குறிச்சி, சூரங்குளம் விலக்கு, சூரங்குளம், மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் இளஞ்செம்பூர், பூக்குளம் வழியாக செல்லக்கூடாது.** |
| 15. | **பேரையூர், முதுகுளத்தூர்** பகுதி வாகனங்கள் முதுகுளத்தூர், வெந்நீர் வாய்க்கால், வெங்கலகுறிச்சி, சூரங்குளம் விலக்கு, சூரங்குளம், மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் கீழகன்னிசேரி, கீழத்தூவல் வழியாக செல்லக்கூடாது.** |
| 16. | **தஞ்சாக்கூர், காக்கூர், ஆதனக்குறிச்சி, புளியங்குடி** பகுதி வாகனங்கள் காக்கூர் ஆர்ச், கிழக்குத்தெரு, முதுகுளத்தூர் வெந்நீர்வாய்க்கால், வெங்கலங்குறிச்சி, சூரங்குளம் விலக்கு, சூரங்குளம், மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் பொசுக்குடி, பொசுக்குடிபட்டி வழியாக செல்லக்கூடாது.** |
| 17. | **நெடியமாணிக்கம், உலையூர், அலங்கானூர்** வாகனங்கள் பழங்குளம், வெங்கட்டங்குறிச்சி, S. காவனூர், மேலகாவனூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர், வந்த வழியாக திரும்ப வேண்டும்.<br>**இவ்வானங்கள் பொசுக்குடிபட்டி வழியாக முதுகுளத்தூர் செல்லக்கூடாது.** |
| 18. | **விளங்களத்தூர்** பகுதி வாகனங்கள், வெங்கலகுறிச்சி, சூரங்குளம் விலக்கு, மகிண்டி காலனி, மகிண்டி விலக்கு, பாம்பூர், வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் கீழத்தூவல், முதுகுளத்தூர் வழியாக செல்லக்கூடாது.** |
| 19. | **வெங்கலகுறிச்சி** வாகனங்கள் சூரங்குளம் விலக்கு, மகிண்டி காலனி, மகீண்டி விலக்கு, பாம்பூர் வழியாக பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே செல்ல வேண்டும்.<br>**இவ்வாகனங்கள் முதுகுளத்தூர் செல்லக்கூடாது.** |
| 20. | கீழக்கன்னிசேரியிலிருந்து வரும் வாகனங்கள் கீழத்தூவல் - பாம்பூர் - பரமக்குடி வந்து பின்னர் வந்த வழியே திரும்பிச் செல்ல வேண்டும். |

## தடை செய்யப்பட்ட வழித்தடங்கள்:

| | |
|---|---|
| 1 | திருப்புல்லாணி to இராமநாதபுரம் |
| 2 | நயினார்கோவில் to எமனேஸ்வரம் |
| 3 | முத்துவிஜயபுரம் to மஞ்சூர் |
| 4 | கமுதி to பேரையூர் |
| 5 | கீழகன்னிசேரி to மகின்டி சந்திப்பு |
| 6 | காக்கூர் to பொசுக்குடிப்பட்டி |
| 7 | Four way By-Pass to கிருஷ்ணா தியேட்டர் சந்திப்பு (வழி) வேந்தோணி |
| 8 | சிக்கல் to முதுகுளத்தூர் (வழி) கீரந்தை, இளஞ்செம்பூர் |
| 9 | கோவிலாங்குளம் to சாயல்குடி |
| 10 | மலட்டாறு சந்திப்பு to கடலாடி |
| 11 | கடலாடி யூனியன் அலுவலகம் to முதுகுளத்தூர் |
| 12 | இளஞ்செம்பூர் to பூக்குளம் காலணி |
| 13 | திருவாடானை to R.S.மங்கலம் |
| 14 | மங்கலக்குடி to திருவாடானை (வழி) அஞ்சுகோட்டை |
| 15 | தொண்டி to திருவாடானை |

## வெளி மாவட்ட வாகனங்கள் நினைவிடம் சென்றுவரும் வழித்தடங்கள் விபரம்

| | |
|---|---|
| 1. | **துாத்துக்குடி-திருநெல்வேலி-விருதுநகர்- கன்னியாகுமரி மாவட்டங்கள்**<br>துாத்துக்குடி-திருநெல்வேலி-விருதுநகர் - கன்னியாகுமரி மாவட்ட வாகனங்கள் அருப்புக்கோட்டை திருச்சுழி, பிடாரிசேரி, பார்த்திபனுார் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்பிச் செல்ல வேண்டும்.<br>மேற்படி மாவட்ட வாகனங்கள் கிழக்கு கடற்கரை சாலை வழியாக வேம்பார், கன்னிராஜபுரம், சாயல்குடி நோக்கி வரக்கூடாது. |
| 2. | **சிவகங்கை மாவட்டம்.**<br>சாலைகிராமம்-இளையான்குடி வாகனங்கள் குமாரக்குறிச்சி-காந்திநகர் வழியாக வரக்கூடாது. பதிலாக அதிகரை விலக்கிலிருந்து மாற்று வழியாக நெடுங்குளம்-கிருஷ்ணாபுரம், முள்ளியனேந்தல்-மஞ்சள்பட்டிணம், ஆற்றுப்பாலம் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்பி செல்ல வேண்டும்.<br>தேவகோட்டை பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் மறவமங்கலம் வழியாக வரக்கூடாது. மாறாக அந்த வாகனங்கள் சருகனி, காளையார்கோயில் -சிவகங்கை-மானாமதுரை- பார்த்திபனுார் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்ப செல்ல வேண்டும். |
| 3. | **திருச்சி - புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் போன்ற மத்திய மண்டல மாவட்ட வாகனங்கள்:.**<br>திருப்பத்துார்-சிவகங்கை-மானாமதுரை-பார்த்திபனுார் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்பச் செல்ல வேண்டும். |
| 4. | **மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டம்:**<br>மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய பகுதிகளிலிருந்து வரும் வாகனங்கள் திருப்புவனம், மானாமதுரை, பார்த்திபனுார் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்பச் செல்ல வேண்டும். |
| 5. | **மேற்கு மண்டல மாவட்ட வாகனங்கள்:**<br>கோயம்புத்துார்-ஈரோடு - சேலம் போன்ற மேற்கு மண்டல மாவட்ட வாகனங்கள் திண்டுக்கல் - மதுரை - மானாமதுரை - பார்த்திபனுார் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்பிச் செல்ல வேண்டும். |
| 6. | **வடக்கு மண்டல மாவட்ட வாகனங்கள்:**<br>திருவண்ணாமலை - வேலுார் - கடலுார் - விழுப்புரம் போன்ற வடக்கு மண்டல மாவட்ட வாகனங்கள் திருச்சி-சிவகங்கை-மானாமதுரை-பார்த்திபனுார் வழியாக பரமக்குடி வந்து அதே வழியாக திரும்பிச் செல்ல வேண்டும். |

## அஞ்சலி செலுத்தவரும் வாகனங்கள் பரமக்குடி நகரில் நிறுத்துமிடங்கள்

### பரமக்குடி R.S.ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வாகனங்கள் நிறுத்துமிடம்

மதுரை, மானாமதுரை, பார்த்திபனூர், கமுதக்குடி, காட்டுபரமக்குடி வழியாக பரமக்குடி வரும் (Light vehicle) ஒட்டப்பாலம் விலக்கு மற்றும் வேளாண்மைத்துறை அலுவலகம் வழியாக மேற்படி மைதானத்தில் சீராக நிறுத்தி வைக்க வேண்டும்.

இளையான்குடி, எமனேஸ்வரம், நயினார்கோயில், சிவகங்கை மாவட்ட வாகனங்கள் வைகை நகர், ஆற்றுப்பாலம், திரௌபதி அம்மன் கோயில் வழியாக மேற்படி மைதானத்தில் நிறுத்தி வைக்க வேண்டும்.

### பரமக்குடி 7th Day மெட்ரிக் பள்ளி, மற்றும் அக்னிஸ் மெட்ரிக் பள்ளி வாகனங்கள் நிறுத்துமிடம்

முதுகுளத்தூர் பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் மற்றும் வெங்கட்டன்குறிச்சி, Four way by-pass வழியாகவரும் வாகனங்கள் $7^{th}$ Day Matriculation School and Agnies School மைதானத்தில் சீராக நிறுத்தி வைக்க வேண்டும்.

### சந்தைப்பேட்டை வாகனங்கள் நிறுத்துமிடம்

இராமநாதபுரம், சத்திரக்குடி, மஞ்சூர், பொட்டிதட்டி வழியாக வரும் வாகனங்கள் மேற்படி மைதானத்தில் சீராக நிறுத்தி வைக்க வேண்டும்.

நயினார்கோயில், பாண்டியூர், பொட்டிதட்டி வழியாக வரும் வாகனங்கள் சந்தைப்பேட்டை வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தவேண்டும்.

**எந்த ஒரு வாகனமும் மேலே கொடுக்கபட்ட இடங்களை தவிர வேறு எந்த பகுதியிலும் நிறுத்த அனுமதி இல்லை.**

### சரக்கு வாகன வழித்தடங்கள்

| | |
|---|---|
| 1 | இராமநாதபுரத்திலிருந்து செல்லும் கனரக மற்றும் சரக்கு வாகனங்கள் திருவாடானை, சருகனி, காளையார்கோயில், சிவகங்கை, பூவந்தி வழியாக மதுரை செல்ல வேண்டும். |
| 2 | வாலிநோக்கம், கமுதி மற்றும் முதுகுளத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து கரி மற்றும் உப்பு ஏற்றிச்செல்லும் வாகனங்கள் சாயல்குடி வழியாக ECR-ல் செல்ல வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பரமக்குடி பார்த்திபனூர் வழியாக செல்ல அனுமதிக்ககூடாது. |

மாவட்ட ஆட்சியர்,
இராமநாதபுரம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**